எதிரிட்டிருக்கும் மரணத்திற்குள் கொடுமையான காலனுக்கு ஏவலாளிகளாகிய 4448 வியாதிக்கும் மரணத்திற்கும் மிகப் பயந்தவர்கள் உள்ளம் அதிதீவிரமாய் நன்முயற்சியிலிருப்பார்கள்.

புவியின்கண் மானிடங்கள் அடியிற்காணும் பேதங்கள் ஒருவாறெனக் கூற யாவரால் முடியும்?

ஆத்துமம்

வேதாந்திகள்

இவர்கள் ஞெப்தி மாத்திரமே, ஆத்துமா என்றுரைப்பார்கள்.

கூடஸ்தர்

பிரமம் விடயங்களைத் தெரிந்து அவைகளில் மறைந்த பிறகு அவை கன்ன ரூபமென்று அறிவதே ஆத்துமா விஷய சிதாகாச சீவன் என்பர்.

பாசுபத காபாலிகா விரதர்

நித்திய வியாபக சைதன்னியமே ஆத்துமா என்பர்.

சாங்கிய பாதாஞ்சலிகள்

அசங்க சின்மாத்திரமே ஆத்துமா என்பர்.

நியாய வைசேடிகர்

ககனம் போல மகத்பரிணாமனாய்ப் பாஷாணம்போல் சடரூபனானாலும் மனம் சம்போகத்தில் சித்து சம்புக்தனாயிருப்பது ஆத்துமா என்பர்.

சைனர்

தேகாதி விலக்ஷணமாய், தேகபரிணமிதனாய், பரிணமித மத்தியில் சாங்கோச விகாச தர்மமே ஆத்துமா என்பர்.

கவுள யாமள சாத்துவீகர்

ஆனந்தமாக நிற்றலே ஆத்துமா என்பர்.

லௌகீகர்

தேக புத்திர களத்திராதிகளின் ரூபமே ஆத்துமா என்பர்.

உலகவாசிகள்

தூல சரீரமே ஆத்துமா என்பர்.

சார்வாகர்

தேகம் நீங்கியபோது பார்த்தேன் கேட்டேனென்று சொல்வதும், நீங்குவதால், பஞ்சசேந்திரியம் ஆத்துமா என்பர்.

சார்வாக ஏகதேசர்

பிராண வாயு போன் பின்பு இந்திரியமில்லாமையால், பிராண வாயுவே ஆத்துமா என்பர்.

உபாசகர்

மனமில்லாத பொழுது பிராண வாயு நீங்கலால், மனமே ஆத்துமா என்பர்.

கணிக வாதியர்

புத்தியில்லாத போது மனஞ் சலிக்கிறபடியால், புத்தியே ஆத்துமா என்பர்.

பௌத்தர்

சுழுத்தியில் அந்தக்கரண முதல் சகல இந்திரியங்களும் இலயமடைகின்றபடியால், சூனியமே ஆத்துமா என்பர்.

பாட்டாசாரியர்

சுழுத்தியில் சூனியமென்று அறிந்து சாக்கிரத்தில் வந்து செல்வதால் சத்தே ஆத்துமா என்பர்.

அந்தர்ாளர், ஆகமஸ்தர்

சூக்ஷம நாடி மூலமாய்ச் சஞ்சரிப்பதால், அணுவே ஆத்துமா என்பர்.

திகம்பரர்

பாதாதி கேச முதல் அறிவு வியாபித்திருப்பதால், புருஷ ரூபமே ஆத்துமா என்பர்.

தார்க்கிகர் பிரபாகரர்

ஆத்துமா கண்டமாயிருந்தால் நசித்துவிடுமாதலால், ஆத்துமா பரிபூரணமென்றும் சடமென்றம் புகல்வர்.

பாட்டர்

ஆத்துமா சுழுத்தியில் சடமாயும், சாக்கிரத்தில் அறிவாயு மிருப்பதால், சடசித்தெனப் புகல்வர்.

சாங்கியர்

பரிபூரணத்திற்கு இரண்டு லக்ஷணம் கூடாவாகையால், ஆத்துமா அறிவாயும் பரிபூரணமாயுமிருக்கும். சுழுத்தியில் காணப்படும் சடம் அந்தந்த ஆத்துமாக்களுக்குச் சுகதுக்கத்தைக் கொடுப்பதால், ஆத்துமா சுபாவம் என்பர்.

யோகியர்

பிரகிருதி என்னும் சுபாவத்திற்கு நடத்துவோனில்லாவிடில் சேஷ்டியாதாகையாலும், ஆக்கினை செய்து காப்பாற்றுகிற வனில்லையாகில், சீவர்களுக்குப் பந்த மோக்ஷமில்லாமையாலும் ஈஸ்வரன் சீவர்களுக்கு அன்னியமாயிருக்கிறான் என்பர்.

பதஞ்சலி மதத்தார்

பிராணிகளின் மனத்தில் அந்தரியாமியாயிருப்பது ஆத்துமா என்பர்.

தார்க்கீகர்

அந்தக்கரணமில்லாவிட்டால் சங்கல்பமில்லை. ஆனபடியால், அந்தக்கரண மொற்றுமைப்பட்ட போது இரணிய கர்ப்பனாயிருப்பதே ஆத்துமா என்பர்.

விஸ்வரூபர்

தூலத்தை விட்டுச் சூக்ஷமமிராதாகையால், கிருஷ்ணன் விஸ்வரூபமெடுத்து எங்கும் காலைக் காட்டியபடியால், விராட்டு விஸ்வரூபமே ஆத்துமா என்பர்.

மதாபிமானிகள் கூறுவதில் உண்மை இன்னதென்று உணர்பவர்கள் ஞானிகள்.

உலகில் இவ்வகைப் பேதங்களாகப் புகல்வர்.

மோட்சம்

வேதாந்திகள்

ஆணவம், மாயை, காமியம் இம்மும்மலங்களும் நீங்கி, ஆத்துமா அருளோடு கூடி நிற்பதே முத்தி; பிரமாத்துமா ஐக்கிய ஞானத்தால் விவகாராதி சமுசார பந்த நிவர்த்தியே மோட்சம் என்பார்கள்.

பாதஞ்சலிகர்

யோக அப்பியாச பலத்தால் மனோலயத்தில் அஞ்ஞான மழிந்ததே மோட்சம் என்பர்.

சாங்கியர்

பிரகிருதி புருஷ விவேகத்தால் அவித்தை நாசமானதே மோட்சம் என்பர்.

சங்கிராந்தவாதி, பாலிகமாவாதி

பசு கரணம் கெட்டுச் சீவகரணமாகிறதே, கர்த்துவமான சமுசார பாவத்தை விட்டு ஞெப்தி மாத்திரமாயிருப்பது மோட்சம் என்பர்.

பார்க்கரியன், பேதவாதி

ஆத்துமா கெடுகிறதென்று, ஆணவமலம் கெடுகிறதே மோட்சம் என்பர்.

மாயாவாதியர்

சரீர தொந்தனை பட்டு நிற்கிற சீவாத்துமாவிற்கு விவேக ஞானம் உண்டாகிறதே மோட்சம் என்பர்.

பிரபாகரன், அமணன்

எங்கு மலிந்த காமிய கன்மங் கெடுகிறதோ, முக்குணங்கள் கெடுகின்றனவோ அங்கு மோட்சம் என்பர்.

புத்தர்

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் கெடுகிறதே மோட்சம் என்பர்.

சமவாதியர்

சுத்த மாயா சரீரமழியாதாகையால், நித்தியமாயிருப்பதே மோட்சம் என்பர்.

பாஷாணவாதியர்

ஆத்துமா கேவலத்தில் கிடக்கும் தன்மையைப் போல முத்தியாலும் ஒன்றுமறியாமலிருப்பதே மோட்சம் என்பர்.

சாத்துவிக சார்வாக லௌகீகர்

ஆனந்த பிராப்தி, மரணமே மோட்சம் என்பர்.

பூர்வமீமாங்கிசிகள், உலகாயதர்

மோட்சம் சுவர்க்காதி லோக பிராப்தி என்றும், மகளிரிடத்துண்டான போகமென்றும் கூறுவார்கள்.

சைனர், கௌலயாழ்மளர்

மோட்சம் ஆகாசமத்தியத்து சூத்திரரோத்திர கமனம், ஆகாச மனாதி சித்திரபிராத்தி என்பர்.

பௌத்தர்

சுகதுக்காதிகளால் மயக்கப்படாமலிருக்கும் சுத்தபுத்தி சித்தியே மோட்சம் என்பர்.

பாஞ்சராத்திரிகள்

வாசுதேவாத்துமகப் பிரகிருதியில் சொரூப ஆனியில்லாமலடங்குவது மோட்சம் என்பர்.

இலௌகீகர்

இகத்தில் புத்திராதிகளுடன் கூடி வியாதி துக்கமில்லாமல் சுகத்திலிருப்பது மோட்சம் என்பர்.

நியாய வைசேடிகர்

ஆத்துமஞ் சரீரேந்திராதி 211 துக்க ஆத்யந்த நாசத்தால் பாஷாணம்போல இருப்பது மோட்சம் என்பர்.

பாசுபதர்

பிரவாகேஸ்வத்தால், ஈஸ்வரத்துவம் அன்னியருக்குக் கொடுத்து ஆத்துமன் ஞெப்தி மாத்திரமிருப்பது மோட்சம் என்பர்.

மாந்திர சமிமாஞ்ஞா சித்தாதிகள்

ஆத்துமன் சடத்துவாதீத சீவ சமானத்துவமாவதே முத்தி எனப் புகல்வார்கள்.

இந்தப் பகுதியை அடுத்து வருகிற விளக்கப்பகுதி மிகவும் முக்கியமானதாகும். சித்தராக விளங்குவார்களையும், ஞானிகளாக முன்னேறுவார்களையும் ஆராய்ந்து, இவர்களுடைய பிறந்த வேளையின் நவகோட்சாரத்தில் எந்தெந்த கிரகம் அல்லது கோள் எப்படி எப்படி அமைகிறது என்ற இரகசியத்தை எடுத்துச் சொல்கிறது. எளிய உரைநடையில் இந்த விளக்கம் அமைந்துள்ளதோடு, வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்து வருகிற ஒரு நடையாக இந்த நடை அமைந்திருக்கிறது.

மதி, லக்கினாதி, கன்மாதி, மூவரும் நட்பாகக் கலந்திருக்கில் நரை திரை நீங்கி நெடுநாளிருந்து மோட்சம். குரு கோபுராமிசம் பெற்று, கேந்திரத்தில் நிற்க, வெள்ளி திரிகோணத்தில் பரதவதாசமிசம் பெற்று நிற்க, கடகலக்கினமானால் உகாந்தவரையிருப்பன். கடகலக்கினமாய் மதி குருவிருக்க, நேந்திரத்தில் வெள்ளி புதனிருக்க, மற்றவர் 3-6-11 ல் இருக்க, ஆயுளில் அளவென முடிவில்லை. குரு சனி ஒரு பாகைக்குட் கூடிப் பாக்கியத்திலிருக்க, மற்ற விடமாகிலும் இப்படியிருக்க, நற்கோள் பார்க்கப் பானு உதயத்தில் பிறந்தவன் முனீஸ்வரனாவான். பாக்கியத்தில் புதன் குரு ராகு கூடி, சனியங்கிசத்தை மேவிடாதிருந்து, தனது அங்கிசமேற, மதியுதயத்திலிருக்க, யுகாந்த காலமிருப்பன். இராகு குசன் சனிசர அங்கிசத்தை மேவி, குரு வெள்ளி ஸ்திர அங்கிசத்திருக்க, மற்றவர் உபய அங்கிசத்திலிருக்க ஆயுள் ஆயிரம். இலக்கினம் உபய ராசியாய், உபயத்தோன் கேந்திர முச்சம் மூலதிரிகோணத்திரிக்க, சனி அட்டமாதி கூடில் ஆயிரம். வாக்காதிபதியும் குருவும் கூடியிருந்தால், சாஸ்திர விசாரனையும் மந்திர உபதேசம் செய்யும் திறமுமாகும். அங்காரகர் சனி சூரியன் குரு இந்நால்வரும் இலக்கணத்திலிருக்க், திரிகோண கேத்திரங்களில் சுபர் இல்லாதிருந்தாலும், சந்நியாசியாவன். குரு சந்திரன் சூரியன் இவரிலொருவர் இலக்கனத்திலிருக்க, அல்லது பத்தாம் இடமிருக்கினும், சனி பன்னிரெண்டில் இருக்கினும், சந்நியாசியாவன். சுக்கிரன் பகை நீசம் பெற்று, அவருக்கு 5-9 ல் பாபர் நின்று, இலக்கினத்தைச்சுப கிரகம் நோகாதிருந்தால், முத்தி பெறுபவன். ஐந்தாம் இடத்திபன் இலக்கினத்திற்கு ஒன்பதில் இருக்க, அவர் ராகுவாகில் ஆகாய கமனமும், சந்திரனாகில், காந்தருவ சித்தியும் புதனாகில், அவிழ்த பிரயோகசித்தியும், குருசுக்கிரன் சனியாகில், பொன் வெள்ளி ரசவாத சித்தியுமாகும். இராகு கேது இரண்டாம் இடமிருக்கில், கல்வியுள்ளவன்; செவ்வாய் ஆட்சி உச்சகேந்திரங்களிலிருக்கில், பெருந்தவசி; சிவ மனோகர ஞானி துலாத்தோர்க்கு வாசி மேலிட யோகம், மந்திரம் குளிகை, வாதம், காயசித்தியுமாகும். கன்னி, மீனம், மத்திம சித்தி. மேடம் தனுசு தாயைப் போற்றிச் சித்திகள் பெறுவர். சென்ன கால மானாலும், யோகம் பூசை செய்தாலும், மாதம் சிங்கம் சிலை கோல் மீனம் ரிஷபம் கடகம் சுறா, வாரம் குருமதி புகர் புந்தி, லக்கினம் மீனம் வில் துலாம் கன்னி, திதி பஞ்சமி சஷ்டி சப்தமி தசமி திரிதியை சதுர்த்தி, யோகம் அமுதயோகமாயிருக்கில் உத்தமம். ஞான சித்தராவர். சென்ன நாள் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி மூலம் உத்திராடம் அஸ்வினி பரணி உத்திரட்டாதி காய சித்தி யோகசித்தியாகும்.

கர்ப்பம் உண்ணத் தனது இலக்கினத்திற்குச் சாரத்தில் கிரகங்கள் சுக்கிரன் ஐந்தில், குரு ஒன்பதில், குஜன் இரண்டில், புதன் பதினொன்றில், சூரியர் ஏழில், சந்திரனிருக்க வேண்டும். கர்ப்பமென்பது முப்புவென்றும், அவரை ரவிமதி சுழி என்றும், பகிர்முகத்தில் தாது மூல சீவமாயுள்ளவையில் எப்பொருளாக அமைந்திருக்கும் முப்பைக் குருவால் தெளிந்து, அலை கொள்ளுவதற்கு முந்தி, லோக குருவாகிய அயக்காந்தச் செந்தூரத்தை அகத்தியர் செந்தூரம் முந்நூறில் கூறியபடி கொள்ள வேண்டும்.

சந்திர கலையில் பிருதவி பூதம் நடக்கும்போது சிவாலயம் வீடு கட்டல், குடிபுகுதல், மரம் வைத்தல், சாந்தி கழித்தல், அப்புக்குக் குளமெடுத்தல், சோலை வைத்தல், விவாகம் செய்தல், உழவு விதை விதைத்தல், தேயுபிணி தீர்த்தல், வாயு குதிரை தேர் கப்பல் ஏற்றுதல், ஆகாயம் மந்திரம் சாதித்தல்.

பூதிய பிரிவு தெரியாவிடில் இடநாசிப்பக்கம் கலை சந்திரனாகையால், அப்படி நடக்கும்போது வஸ்திர ஆபரணம் பூணல், தூதனுப்பல், அடிமை கொள்ளல், விவாகம் செய்தல், கிணறு வெட்டல், குடிபுகுதல், அரசரைக் காணல், சாந்தி தெய்விரதிஷ்டை செய்தல், சுரம் தீர்த்தல், சமாதானம் செய்தல், தனம் வைத்தல், வலநாசிச் சூரிய கலையில் உபதேசம் பெறல், வணங்கல், யுத்தம், வியாபாரம், சூது, வழக்குரைத்தல், சவாரி செய்தல், சங்கீதம் பாடல், நித்திரை செய்தல், பிசாசு ஓட்டல், போஜனம் செய்தல், ஔடதம் புசித்தல், ஸ்நானம் செய்தல் உத்தமம்.

இதை அடுத்துவரும் பகுதி சித்தர் இலக்கியத்தில் காணப்பெறுகிற இன்னொரு பெரிய இரகசியத்தைக் கண்டு சொல்கிறது.

துடி இயல் என்னும் பகுதி சித்தர்கள் கண்ட ஒரு நுட்பமான அறிவியலாகும். நம்முடைய உடம்பிலே எந்தெந்த உறுப்புக்கள் எப்படி எப்படித் துடித்தால் உடம்புக்குக் கேடு வருகிறது என்பதை நம் முன்னோர்கள் வெளியிட்டுச் சொன்னதன் தொகுப்பை உணர்த்துகிறது இந்தப் பகுதி.

சக்தியாய்ச் சிவமாய்த் தாண்டவமாடும் தாசியாகும்
சரீரத்தில் துடி பயன்

அடர்ந்து கைதுடிக்கில், ஒரு வருடம்; கால், ஆறு மாதம்; நெற்றி, மூன்று மாதம்; கன்னம், பத்து நாள்; காது கேளாவிடில், நாள் ஏழு; பார்வை தெரியாவிடில், நாள் ஐந்து; வாசனை தெரியாவிடில், நாள் மூன்று; நாக்குழறில், நாள் இரண்டில் மரணமெனக் கொள்க.

வாயில் சலம்வைத்து நிழலிருந்து ரவியில் உமிழ, அதில் இந்திர தனுசு பஞ்சவர்ணமாகத் தோன்றுமாகில், ஒரு வருடம் வரையில் மரணமில்லை; முறிந்திருக்கில், அந்த ஆண்டில் மரணம்; நிறம் மாறிப் பெண்ணுருந் தோன்றில், ஆறு மாதத்தில் மரணமாவர்.

அமாவாசை ரவியிலாகிலும், பருவ சந்திரனிலாகிலும் உருக்கிய நெய்யைக் கிண்ணத்திலிட்டுப் பூமியில் வைத்து முன்கண்ட ரவிமதியில் ஒன்றைக்ப் பார்க்க வெண்மை நிறமாகக் காணில், பிராண பயமில்லை; செம்மை, வாழ்வு; பொன்மை, கேடு; பசுமை, நோய்; கருமை, சாவு; தென்புறம் வட்டம் குறைந்து காணில், ஒரு வருடம்; மேற்புறம் குறைந்தால், ஆறு மாதம் வடபுறம் குறைந்தால், மூன்று மாதம்; நடுவே தொள்ளையாயிருக்கில், பத்து நாளில் மரணமாம். விசேட பலனைச் சரநூலில் பார்க்க.

இதன் பின்னர் வருகிற பகுதி சித்தர் இலக்கியத்தின் இன்னொரு பெரிய இரகசியத்தை எடுத்துக் கூறுகிறது. அதுவே 'சாயாதரிசனம்' என்று வடநூலார் அழைக்கிற ஞானப் பேருண்மையாகும். ஒருவன் தனது நிழலைத் தானே கண்டு, வருங்காலத்தை உணர்ந்துகொள்ளக் கூடிய முறை இது. இதனோடு சேர்த்து, எதிர்கால நிகழ்ச்சிகளையும் வெளியுலக இயல்புகளையும் உணர்ந்துகொள்ளக் கூடிய இரகசியங்கள் வெளியிடப் பெறுகின்றன.

ரவிநிழல் அல்லது மதி பிரகாசத்தில், தனது நிழல் பூமியில் தனது உருவ அளவாயிருக்கும்போது, அந்த நிழலைத் தனது நேத்திரம் இமையால் பார்த்துக் களங்கமில்லா ஆகாயத்தைப் பார்க்கில் தனது உருவம் பெரியதாய்த் தோற்றும். அது பொன்னிறமாகில் செல்வம்; வெண்மை, ஆயுள் வளரும்; செம்மை, ஆயுள் குறையும்; கருமை, நலி; அவ்வுருவில் கைகால் தோன்றாவாகில், ஆறு மாதத்தில் மரணம்; தலை தோன்றாமலிருந்தால் மூன்று மாதத்தில் மரணம். இந்தச் சாயை வடிவமானது தனது மனமும் நேத்திரமும் ஒற்றுமையாயத் தோற்றமாயிற்று.

'சாயை மறையாதோ தன்னிடம் தன்வெளிக்குள் ஓய அகததினிடை ஓடாதோ?' என்று கூறியபடி, கண்ணும் கருத்தும் ஒற்றுமை செய்த அகநோக்குடையவர்கள் இருந்தபடி சராசரங்களின் இயல்பையும் மூன்றுகால வர்த்தமானங்களையும் தெரிந்து கொள்ளக்கூடும். சாயை தீப பிரகாசமிருப்பது தெரிந்த விஷயம். அஃது யாதென்று கவனிப்பதில்லை. அஃது எங்கும் நிறைந்தது என்பது தெரியாமையால் சிலருக்கு சங்கை தரும்.

ஒரு வீட்டில் நால்வராகக் கூடி, அந்த வீட்டில் ஒரு பொருளை யானாலும் ஒரு கட்டடத்தையானாலும் நால்வரும் நினைந்து கொண்டு, தாம் நினைத்த சங்கதியறியாத ஒருவன் நேத்திரத்தைத் துணியால் மூடி, அவன் தோள்மீது நினைந்த நால்வர் கையும் வைத்து, அவன் இஷ்டப்படி போகும்படி சொன்னால், அவ்விடம் விட்டு நால்வர் குறித்த இடமே போய் நிற்பான்; குறித்ததைத் தன் கையால் தொடுவான்.

இதன்றியும், ஒருவனை நமது சுவாசம் உள்செல்லும்போது நினைந்தால், அதே சமயம் அவன் நம்மை நினைக்கின்றான்.

எதிரிலிருக்கும் ஒருவனுக்கு நடக்கும் கலையும் அதிற் பூதியமும் நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நமது கலையைப் பார்த்தால், அப்போது கலையும் பூதியமும் நின்று எதிரிக்கு நடக்கும் கலையும் பூதியமும் நடந்து தெரிவித்து, உடனே முன் நமக்கு நடந்தது போல நடக்கும்.

இதனை அடுத்து வரும் பகுதி ஒரு குறிப்பிட்ட சித்தர் முறையில் பயிற்சி முறையை எடுத்தோதுகிறது.

சரியை கிரியை யோக ஞானமாகிய நான்கு பக்குவர்களும் மோக்ஷமாகிய முத்தியடைய வேண்டும் என்பதே கருத்து. அதிலும், சரியை கிரியையுடையவர் இப் பிறவியிலாகிலும், அல்லது மறுபிறவிமானிடமாகத் தோன்றியாகிலும், அதிக இகபோக சுகங்களையுடைய வேணுமென்ற ஆவல் பூண்டவர்களாகவும் இருக்கின்றனர். எவரெவர் உண்மையாக எந்தவித பாவனையும் கோரிக்கையுமாயிருந்து வருகிறார்களோ, அவற்றிலே ஆத்துமா தேகத்தைவிட்டு நீங்கும் போது எண்ணம் உதிக்குமென்று, கோரிக்கைப்படி சனனமும் இச்சுகமும் பெற்று அனுபவிக்க வேண்டுமென்று ஆகமநூல் கூறுகின்றது.

யோகவான், ஞானி இவர்கள் முடிவு பெறும்போது தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றிலொன்று ஐக்கியமாய், அவைகளுக்க ஆதாரமாயும் அணுவுக்கணுவாயுமிருந்தஆன்மா தேகத்தை விட்டு மகாகாயத்தில் இலயமாவதும் அல்லது அத்தேகத்தில் தானே ஐக்கிய மாவதும் நமது சிற்றறிவிற்கு விளங்காது. அல்லது வினைக்கீடாய் வேறு பிறவி எடுப்பதற்கு எவ்வகையாக ஒரு புருடன் சுக்கிலத்தில் அணுகினவன், ஆத்துமா சீவனென்பது போய்ச் சம்பந்தமுற்றதும், உண்மை இவ்வாறென அறிந்தால் மாத்திரம், நரக மோக்ஷம் உண்மை என்பதும், அநேக பிறவிகளெடுத்து அவற்றின் புண்ணிய பலத்தால் மானிடம் பெறுவதும், கைலாய வைகுந்த பரமபதமிடமும், எமலோக நரகமிடமும் கால தூதரும் நன்றாக விளங்கும். ஆகையால், கால தாமதம் செய்து உலக வியாபாரப் பெருந்தினையிலாழாமல் மனத்தை ஒருவாறாக நிறுத்தி, நூல் விசாரணையும் சாதுக்கள் சங்கமும் பெற்று, நிரதிசயானந்தப் பேரானந்த சுகம் பெற நன்னிலை பெறுங்கால் மேற்கண்ட சங்கைகள் நிவர்த்தியாகும்.

சுக்கில சுரோணித சம்பந்த காலம் அமைந்தபடி சனனமெடுப்பதும் மரணமாகும் வரையில் அனுபவிக்க வேண்டியருக்க, நாம் மத்தியில் என்ன முயற்சி செய்தாலும் யாதும் பயன்படாது என்று சிலர் புகல்வர். அவ்வகை கருதுவது நமது அக்கியானம். அனுபவிக்க வேண்டுவதை வேண்டுவதனாலும், கடவுள் சிந்தை சதா உடையவர்களாகில், பர இச்சா பிராரத்துவமாகச் சகல சுபங்களையும் கடவுளளித்து ரக்ஷிப்பர்.

வலக்கையை முகத்து நாசிக்கு நேராக நிறுத்தி இரண்டு கண்ணினாலும் கைந்நாடி துடிக்குமிடத்தில் இமை ஆடாமல் பார்க்கக் கை சிறிய துரும்பு கனமாகத் தோற்றும். அப்படித் தோன்றுமாகில், ஆறு

மாதவரை மரணமில்லை; அல்லது கைப்பிரமாணமாகவே தோற்று மாகில், சீக்கிரம் மரணமென்றறிக. முன்கண்ட பார்வையாகப் பார்த்து, கை சிறியதாகத் தோற்றிப் பின்பு இருளாகத் தோற்றும். அவையும் நீங்கித் தீப்பிரகாசமாக வெளிச்சமுண்டாகும். அப்படித் தோன்றிய பிறகு அப்படிச் செய்யும் அப்பியாசிகள், அந்தப் பிரகாசத் தில் அனேக அற்புதங்களைக் காணுவதுண்டு. அந்தச் சாதகமாகச் சிலகாலஞ் செய்தவர்களுக்கு விளங்கும்.

நிழலுள்ள தாழ்வாரத்தில் வெளியாயிருக்குமிடத்தில் உட்கார்ந்து கொண்டு, முகம் பார்க்கும் கண்ணாடியை வலக்கையிலெடுத்து, தனது முகத்தின் வலநேத்திரக் கருமணியில் விளங்கும் வடிவைக் கண்ணிமையாமலும் மனம் வேறு வழி செல்லாமலும் பார்த்திருந்த கண்ணிலிருந்து சலம் வடியும். அதற்கும் இமையாமல் பார்க்க, இருளாகத் தோன்றும். அந்த இருளை அசைவறப் பார்த்திருக்க, வெளி தோன்றும். அந்த வெளியினிடத்திலும் அனேக அற்புதங்களை அனுபவிகள் காண்பார்கள்.

உலகில் அஞ்சனமென்னும் கறுப்பு நிறமுள்ள மையைக் கையில் பொட்டுப்போல வைத்து, தீப முன்னிலையில் கண்ணிமையாடாமல் மையைப் பார்த்து, அதில் அநேக தேவதைகளைக் கண்டதாயும், தாங்கள் கோரிய இடம் பொருள் இவைகள் தெரிந்ததாயும் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம. சத்த பரிச ரூப ரசகந்தமாகிய ஐந்தும் கூடியது அஞ்சனம். இதைப் பார்க்குமிடத்துக் 'கண்ணாரமுதமாய், விளக்கொளியாய் நின்றானை' என்று கூறிய வாக்கியம் உண்மையாக விளங்குகின்றது. மகான்கள் உரைத்த லக்ஷியங்களளைப் பரிபாக பக்குப்படிக்குச் சாதித்து, அவைகளினால் முடிவுபெறும் பயனைத் தேகம் பிணமென்று புகலாமுன், அனுபவ முதிர்ந்து நிரதிசயானந்த நிர்விகல்பமாய், ஜீவன் முத்தனாக மனம் வாக்குக் காயத்தால் மகான்களைப் போற்றுவதே, நமது கருத்தாகும்.

இதன்பிறகு யோனிபேதம் முதலிய அமைப்பு முறைகளை விளக்கி, ஞானம் பயிலும் மாணவருக்குச் சில நுட்பமான யோசனைகள் கூறப்பெறுகின்றன. கருவிகள், அவற்றைப் பயன்படுத்துகிற முறை, ஒடுக்கத்திற்கு வேண்டிய சாதனங்கள் ஆகியன சொல்லத் தொடங்கி, இவற்றிற்குரிய மேற்கோட் செய்யுட்களை ஞான பரிபக்குவம் பெற்ற தொன்மையான பெரியோர்களின் சித்தர் இலக்கியத்திலிருந்து எடுத்துக் கூறியுள்ளதைக் காண்கிறோம். இப்பகுதியில் அங்க அடையாளங்களும் விளக்கம் பெறுகின்றன.

உலகில் நால்வகை யோனிணுய்டு. அவை பையினிடம், முட்டையிடம், வியர்வை, வெப்பம், வித்துகளால், உற்பவம். அவற்றில் எண்பத்துநான்கு லக்ஷபேதமாவன; தேவர் பதிநான்கு; மானிடம் ஒன்பது; மிருகங்கள் பத்து; ஊர்வன (சர்ப்பவகை) பதினொன்று; நீர்வாழும் பிறவிகள் பத்து; தாவரம் இருபது; பாதாள, ராக்ஷஸ யோனி பத்து; ஆக, எண்பத்துநான்கு லக்ஷ பேதமெனச் சாஸ்திரம் கூறும்.

பூதம் 5: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்
பொறி 5: சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்.
தொழில் 5: தேவ, தானம், விசர்க்கம், ஆனந்தம், பயம்.
கோசம் 5: அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்கியான மயம், ஆனந்த மயம்.
சயம் 5: அமர சயம், பக்குவா சயம், மல சயம், சல சயம், சுக்கில சயம்.
புலன் 5: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.
கரணம் 4: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
குணம் 3: சாத்துவிகம், இராசதம், தாமதம்.
மலம் 3 : ஆணவம், மாய்கை,காமியம்.
கன்டேந்திரியம் 5: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.
இராசம் 8: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேகம்.
நாடி 10: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புலி, சங்குனி, குணா.
ஆதாரம் 6: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை.
மண்டலம் 3: அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம்.
அவத்தை 5: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், அதிதுரியம்.
தோஷம் 3: வாதம், பித்தம், கிலேத்துமம்.
ஏஷனை 3 : அர்த்த ஏஷனை, புத்திர ஏஷணை, லோக ஏஷணை.
வாயுக்கள் 10: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன்.
வினை 2: நல்வினை, தீவினை.
அறிவு 1:

கைலாய வர்க்க வேடம்

ஆறு முகமுள்ள பதினாறு ருத்திராக்ஷ சபமாலை மணி, விரல் முப்பத்தாறு கொண்ட யோகதண்டு, பரிசெம்பு, 11-16 மஞ்சாடியுள்ள குண்டலம், தொண்ணூற்றாறு அங்குலமுள்ள யோகவெட்டி, நான்கு அங்குல முள்ள கவுபீனம், புலி அதளாசனம், இரசலிங்கக் கடகம், உப்புமணி.

திருமூல வர்க்க வேடம்

சபைப் பிரம்பு ஐந்து. பட்டை உப்பு, கதை, படிகமணி, யோக வேட்டி, படிகலிங்கம், காதில் செம்புருட்டு, புத்தகம், ருத்திராக்ஷம் பாதக்குறடு, புலித்தோல்.

ஆசனங்கள்

மான்தோல், ஞானம்; புலித்தோல், செல்வம், தர்ப்பாசன், மோக்ஷம்; சித்திரக்கம்பளம், நன்மை; வஸ்திரம், தீமை நீங்கல்.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகந் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே!

மந்திமென்னும் மனத்திர தியானத்தால் பிணி முதலியவை நீங்க வாயில் செபியாமல் மனத்தால் தியானிப்பது சித்தர்கள் வாக்கியம். சகல வியாதியும் நீங்க மஞ்சளால் கணபதி வைத்து, அறுகு புட்பம் சார்த்தி, தாம்பூலம், தேங்காய், பழம், தூபதீபம் செய்து, நேந்திரப் பார்வையைப் புருவமையம் வைத்து, இடக்கையில் விபூதியைப் பரப்பி, அதில் பிரணவ மெழுதி, 'அம் சிங் கிலி' என்று தியானம் ஆயிரத்தெட்டுச் செய்து, விபூதியை நோயாளியை உட்கொள்ளும்படி கொடுத்துவர நோயும் தீரும்; பிசாசும் போகும்.

கர்ப்ப நோய் தீர்ந்து, கர்ப்பமாகத் தேனும் முலைப்பாலும் கூட்டி, 'ஓம் சிறி சிசு' என்று பதினாறு தரம் தியானித்து, பெண்களை உட்கொள்ளச் செய்க.

பிரசவ கால நோய்க்கு வெண்ணெயை 'டங், டம்' என்று தியானித்து வயிற்றில் பூசப் பிரசவமாகும்.

சிலந்தி கட்டிகள் உடையவும், வீக்கம் வாடவும், வெண்ணெயை 'உம், வங், தம், ஓங், றீங், நசி, மசி' என்றாகிலும், அல்லது 'உம், வங், தம்' என்றாகிலும் தியானித்துத் தடவி விபூதி உள்ளுக்குக் கொடுக்கவும்.

கண் புகைச்சல், மாலைக்கண், சூடு, குத்தல், சதைப்படலம் தீர, ஒரு பாத்திரத்தில் சலத்தை விட்டு,அதைக் கையில் வைத்துக் கொண்டு 'லா, லு, லீ' என்று தியானித்து, அந்தச் சலத்தினால் கண்ணைக் கழுவிவரச் செய்யவும்.

விஷமிறங்க, சலத்தை 'ஓம், கிலி, நசி, நசி' என்று நூற்றி எட்டு தியானித்து, சலத்தை உள்ளுக்குக் கொடுக்கவும்.

சகல பாபமும் நிவர்த்தியாக, 'ஓம், றங், றீம், யநம, சிவ, சகல பாப நிவாரணி யாமி' என்றோதவும்.

'ஓங்கார கம்பம்' என்பது உணர்வெழுத்தாகச் சப்திப்பது தேவியாகும். 'இருண்டவன் கண்ணுக்கு மருண்டதுபேய்' எனப் புகல்வது

போல, அக்கியானத்தால், பேய், பிசாசு, காட்டேரி, சாமுண்டி, துர்க்கி, காளி, மூளி, அனுமார், வீரபத்திரன் முதலிய நாமங்ளுடையவைகளிருப்பதாயும், அவற்றை மந்திரங்களால் உருவேற்றி வசியம் செய்துகொண்டு, அதனால் இக அஷ்ட கர்மங்களை நடத்துவதாகவும் மந்திரவாதிகள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அவை முடிவாகப் பார்க்குமிடத்து, அவரவர் கற்ற நூலளவும் விசாரணையும் எவ்வளவு மனத்திடம் நிச்சயப்பட்டிருக்கிறதோ, அவர்கள் பாவப்படி கடவுள் எங்கும் நிறைந்தவராதலால், கோரிய வண்ணம் தோற்றிப் பலனளிக்க கூடியே விளக்குகின்றன. பாவமும் தோற்றமும் அழிவும் வருமெனவும், நிறைந்த பரிபூரணம் முடிவென்னும் வேதமும் அனுபவிகளும் கூறுவர்.

சிரசையாட்டிச் சரீரமசைத்து நடக்கையாலும், மல்லாந்து மார்மீது கைவைத்தும் புரண்டு புரண்டும், இருகரத்தையும் தொடைக்குள் வைத்தும், நெடுமூச்சுவிட்டுப் படுக்கையாலும், மலசல மடக்கலாலும், மனவேகத்தாலும், இராசத தாமத உணர்வினாலும் வியாதிகளுற்பவமும் சொப்பனாதி அவஸ்தையும் நேரும்.

ஈரா றேபோர் சமாதிதன லியங்கி நடக்கி லீரெட்டாம்;
மாரா தோடில் ஐயைந்தாம்; மருவித் துயில லவ்வாறாம்;
காரார் குழலா ருடன்கூடிக் கலவி கழித்த லெட்டெட்டாம்;
நேரே நோக்கி நிலைநிறுத்த நிற்குஞ் சிவமு மதுதானே

நெடிதான தாரையொன்று சங்கி ரண்டு
நின்றா தும் திருக்கோவி லறையி னுள்ளே
வடிவாக ஒருபாதம் ஆடி நிற்கும்
மற்றொருகால் தூக்கிறின்ற சிவனைக் கண்டோர்
கடிதாக உடல்வெறுத்துத் தவங்கள் செய்து
கண்மூடிப் பூசித்துக் கலங்கு வாரோ?
படிமீதில் திருக்கோவில் நதிகள் தேடிப்
பரிதவித்தே யுழல்வதென்ன பகர்ந்தி டீரே

உருத்த ரித்த நாடி தன்னி லோடு கின்ற வாயுவைக்
கருத்தி னாலி ருத்தியே கபால மேந்த வல்லிரேல்
லிருத்த ரும் பால ராவர் மேனியுஞ் சிவந்திடும்;
அருட்ட ரித்த அம்மை யானை அப்ப னாணை யுண்மையே

பொய்யென்று சாத்திரத்தைச் சொல்வா னாகில்
புழுவான வாழ்நரகில் வீழ்வான் பாவி;
மெய்யென்று குருபதத்தைத் தொண்டு பண்ணி
வேதாந்தப் பலநூலும் விரித்துப் பார்த்துக்

கைமுறையும் குருமுகமாய்க் கண்டு தேறிக்
கற்றவரை வணங்கியே சொல்லக் கேட்டுப்
பொய்மறந்து மெய்யுகந்தே அறவிற் கூடிப்
பூரணமே தெய்மென்று போற்றி நில்லே

ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவே யென்றாம்
ஆனாலும் பேதைகுணம் பெண்ணுக்குண்டு;
வீணுக்கே எடுத்தசன்மம் அனந்தங் கோடி
விவேகமுத்தி யடைந்தவர்கள் அதிக முண்டு;
ஊணுக்குத் தேடியுண்டே யுறங்கிச் செத்த
உலுத்தருண்டு புருடரிலே அனந்தங் கோடி;
தானுக்கே ஏகசரா சரந்தான் நெஞ்சே!
சற்குருவின் சொற்படியே சார்ந்து பாரே.

முத்தரையும் பெத்தரையும் முகக்கு றியான்
நகக்குறியான் முழுதுந் தேறின்,
மெத்தனவா கியமொழியும் ஆனந்தப்
பரவசந்தான் மிகுந்த சோர்வுஞ்
சித்தநிலை தெரியாத செல்வமுமா
யிருப்பர்நல் லோர்தீயோ ரெல்லாம்
இத்தகைமை யோர்களையும் இகழ்ந்து புகழ்ந்
தோர்க்குறவா யிருப்பர் தாமே.

போகாம லிருக்கவென்றா லாசான் தன்னைப்
பொற்பூவைச் சார்த்தியல்லோ காக்க வேண்டும்?
வேகாத தலையல்லோ முன்னே கேளு;
விளம்பியபின் சாகாக்காலை விரும்பிக் கேளு;
வாகாக வாதவித்தை கண்டோர்க் கையா!
வலதுமுழந் தாளிலொரு மறுவைப் பாரு;
ஆகமுடனே க்கடமது சாய்வு காணும்
அப்பனே! இன்னமுரு வங்கள் கேளே!

கேளப்பா இடமுதுகில் மறுத்தான் காணும்;
கெடியான இடக்கையில் சங்கு சக்ரம்
நாளப்பா இக்குறியை நன்றாய்ப் பாரு;
நாசியிட நாசியிலே மறுவைப் பாரு;
வேளப்பா இடமுதுகில் மறுவைப் பாரு;
வேதாந்த வாதியெனக் குறியே பாரு;
ஆளப்பா இப்படியே அடையா ளங்கள்
ஆரையும்நீ கண்டவரை யடுத்துக் காணே.

நெற்றியில் சூல ரேகையுமிருக்கும். மாணாக்கருக்கு உபநயனம், சந்தியா வந்தனம், உபதேசம், காயத்திரி ஜப தப முதலியவைகள் ஆசிரியராகும் குரு செய்து வைக்கின்றனர்.

வேதமென்ற ஆகமங்க ளாறு சாத்ரம்
வெவ்வேறு மதபேதம் சமய பேதம்
காதமென்ற காதியும்நால் பதினெட் டாகக்
கவுத்துமா யுலகோரை மயக்கங் காட்டிக்
கீதமென்றா லரிகீதம் சிவகீத மென்றும்
கிருபையுடன் வெவ்வேறாய்ப் பிரித்துக் காட்டிப்
பாதமென்று சாவதுமே நிசந்தா னென்று
பாடினார் சாத்திரத்தைப் பாடி னாரே

என வியாசர் கூறியதாக அகத்தியர் கூறியிருக்கின்றார்.

உபநயனம் என்பது, மூன்றாவது நேத்திரம் - அறிவு, உணர்வு. அதனால், சந்தியா, வந்தனமென்பது இரவிமதி தனதிடம் ஒற்றுமையாகும் காலம். உபதேசமாவது, பகிர்முகநோக்கு நீங்கி, ஞான தேகமாகிய அகமுக சுத்த வெளியிடமிருந்து சபதபங்களைச் செய்விக்கக் குரு திருவருள் புரிவது.

இதை அடுத்துவரும் பகுதியிலே, மிகவும் முக்கியமான ஒரு பகுதி விசிட்ட ஞானம் என்பது. அந்தப் பகுதி வருமாறு:

உண்டாகி எவ்விடத்தும் உற்ற போதம்
உயிரசைவால் உணர்வுறுமப் போதந் தன்னை
மண்டாமற் றடுக்கைபெரு நன்மை யாகும்;
வளர்போதங் காண்பவற்றை மருவு மாலால்
தண்டாமற் காண்பவையே மனத்துக் கென்றுந்
தவிராத துயராமத் தனிப்போ தந்தான்;
மிண்டாத சுழுத்தியிற்போ தம்போல் நிற்கில்
வீடதுபே றதுவிமல பதம்வே றில்லை.

'கருவி கரணங்களோய்ந்த தொண்டர்களிடத்திலே நீ வீற்றிருப்பவன்' எனத் தாயுமான சுவாமிகள் கூறியதும்,

அதுவென்றால் எழுவென்வொன் றடுக்குஞ் சங்கை;
ஆதலினால் அதுவெனலும் அறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவும் என்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
கதியின்றி.யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

என்ற சித்தர் வாக்கும் அந்தப் பக்குவநிலையை விளக்குவனவாம்.

இந்நிலையிலிருந்து மகான்களின் கிருபை பொருநதிய தலங்கள்

அகஸ்தியர்	-	அனந்த சயனம்
கும்பமுனி	-	கும்பகோணம்
புலத்தியர்	-	பாபநாசம், ஆவுடையார் கோவில்
திருமூலர்	-	சிதம்பரம்
திருமூலவர்க்கம்	-	நெடுங்குன்றம்
திருமூலநோக்கம்	-	மேலைச் சிதம்பரம்
சட்டைமுனி	-	சீகாழி, ஸ்ரீரங்கம்
கோரக்கர்	-	திருக்கோணமலை
கருவூரார்	-	திருக்காளத்தி
பதஞ்சலி	-	ராமேஸ்வரம்
இராமதேவர்	-	அழகர்மலை
அழுகண்ணர்	-	நாகப்பட்டிணம்
நாரதர்	-	திருவிடைமருதூர்
மார்க்கண்டர்	-	கருவை நல்லூர்
மச்சமுனி	-	பரங்குன்றம், மயிரேசகம், திருவானைக்காவல்
கொங்கணார்	-	திருப்பதி, கோடிதுறை, திருக்கணங்குடி
பாம்பாட்டிச்சித்தர்	-	திருஞாலம், துவாரகை
புன்னாக்கீசர்	-	நான் கனாசேரம்
காசிபர்	-	ருத்திரகிரி
வரதர்	-	தென்மலை
கன்னிசித்தர்	-	பெருங்காவூர்
தன்வந்திரி, வசிட்டர்	-	வைத்தீசர் கோவில்
போகர்	-	திருக்கழுக்குன்றம்
நந்தி, விஸ்வாமித்திரர்	-	காசி, திருவாடுதுறை
காளங்கி, கடுவெளிச் சித்தர்	-	திருக்காஞ்சிபுரம்
இடைக்காடர், கௌதமர்	-	திருவருணை
சேது	-	திருவிடைமருதூர்
கமலமுனி, சந்திரானந்தர்	-	மதுரை